# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 15.07.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 1676/SCIC/2024**

Thiru Ji Ji Mathew.V - மேல்முறையீட்டாளர்
Old No.18, New No.61
Rathna Sabapathy Street
Old Washermenpet. Chennai - 600 021.
Cell:98409 08994

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
முதுநிலை வருவாய் அலுவலர்
மண்டலம் - 4. Old Washermenpet
பெருநகர சென்னை மாநகராட்சி
Door No. 266, Thiruvotriyur High Road,
Chennai - 600021

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **13.11.2023** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 29.12.2023 |
| 3. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 12.02.2024 |
| 4. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 07.04.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 13/11/2023 நாளிட்ட மனுவை The Public Information Officer, O/o.the Zonal Officer, Zone-4, Corporation of Chennai, Chennai-21 அவர்களுக்கு அனுப்பி, அதில் “Copy of the License approved and submitted by the Authorized representative of the respondent, M/s.Indus Tower in the referenced address on 30$^{th}$ September 2022 during the personal hearing of the petition.” என்பன போன்று 10 (பத்து) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (15/07/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் Thiru. Ji Ji Mathew.V அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், திருமதி.P.கனகவல்லி முதுநிலை வருவாய் அலுவலர், வருவாய் பிரிவு, மண்டலம்-4, சென்னை பெருநகர மாநகராட்சி, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை அவர்கள் நேரில் ஆஜரானார். ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின் பக்கத்து வீட்டுக்காரர் செல்போன் டவர் நிறுவுவது குறித்த தகவலை அளிக்க வேண்டுமென்று மனுதாரர் கோரியுள்ளதாகத் தெரிய வருகிறது. ஆணையத்தின் விசாரணையின் போது ஆஜராகியிருந்த பொதுத் தகவல் அலுவலர் 07/04/2025 தேதியிட்ட கடிதம் வாயிலாக பதில் அளித்திருப்பதாகத் தெரிவித்தார். மனுதாரரின் முக்கியக் கோரிக்கையாக, செல்போன் டவர் நிறுவுவதற்காக தனது பக்கத்துவீட்டுக்காரருக்கு அளித்த லைசென்ஸின் நகல் தனக்கு அளிக்கப்பட வேண்டுமென்றார். அதற்கு பொதுத் தகவல் அலுவலர், செல்போன் டவர் நிறுவுவதற்காக மாநகராட்சி நிர்வாகம் யாருக்கும் அனுமதி அளிப்பதில்லை, இவ்வழக்கு தொடர்பாகவும் எந்த ஒரு லைசென்சும் அளிக்கப்படவில்லை என்றும் உறுதியாகத் தெரிவித்தார். **எனவே, பொதுத் தகவல் அலுவலர் / முதுநிலை வருவாய் அலுவலர், வருவாய் பிரிவு, மண்டலம்-4, சென்னை பெருநகர மாநகராட்சி, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை அவர்கள், செல்போன் டவர் நிறுவுவதற்கு யாருக்கும் லைசென்ஸ் அளிப்பதில்லை என்பதையும், இவ்வழக்கிலும் யாருக்கும் லைசென்ஸ் வழங்கப்படவில்லை என்பதையும் தெரிவிக்கும் வகையில் ஒரு பிரமாணப் பத்திரத்தை (Sworn Affidavit) மனுதாரருக்கு விரைவு அஞ்சல் வாயிலாக 31/07/2026-க்குள் அனுப்பி வைப்பதோடு, அதுகுறித்த நிறைவேற்றுகை அறிக்கையினை 07/08/2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 1676/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
முதுநிலை வருவாய் அலுவலர்
மண்டலம் - 4. Old Washermenpet
பெருநகர சென்னை மாநகராட்சி
Door No. 266, Thiruvotriyur High Road,
Chennai – 600021

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

Thiru Ji Ji Mathew.V
Old No.18, New No.61
Rathna Sabapathy Street
Old Washermenpet. Chennai - 600 021.
Cell:98409 08994

RG/Sr.PC